முற்பகல் 10.20

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித் தேவர் உட்பட நான்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பேரில், பின் வருமாறு விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

25–9–1991 அன்று, மதுரை வழக்கறிஞர் திரு. ஜெயராஜ் அவர்கள் செல்லூர் காவல் நிலையத்திற்கு வந்து ஒரு வழக்கு தொடர்பான விசாரணைக்காக கூட்டிவரப்பட்ட, தனது உற வினரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். அவருக்கும் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. தீனதயா ளனுக்கும் பேச்சு வார்த்தைகள் முற்றி, கைகலப்பில் முடிந்த தாகத் தெரிய வருகிறது. இதுபற்றி, மதுரை வழக்கறிஞர் கள் சங்கத்தினர், மதுரை நகர காவல்துறை ஆணையரைச் சந்தித்து புகார் செய்ததைத் தொடர்ந்து உதவி ஆய்வாளர் தீனதயாளனையும், காவலர் 1413—கதிரேசனையும் வேறு இடத்திற்கு மாற்றியதையொட்டி, மதுரை வழக்கறிஞர்கள் தங்களது போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்துள்ளனர் என்ற தகவல் கிடைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிவிப்பு

(அ) அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (சிண்டிகேட்) இச்சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், தங்களிலிருந்து ஒரு வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, அண்ணா பல் கலைக்கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுவர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டு களாகும். இருப்பினும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவி யினை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு இப்பதவிக்காலம் முடிவு அடையும். எனவே. வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 27–9–1991, வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர், செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத்தாள்கள் 28–9–1991, சனிக்கிழமை

பிற்பகல் 3.00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள், 30-9-1991 திங்கட்கிழமை, பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 3-10-1991, வியாழக்கிழமை காலை 10 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

5. கவன ஈர்ப்பு.

(அ) ஆரம்பப்பள்ளி ஆசிரியர் நியமனங்களில் குறிப்பிட்ட மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் என்ற ஆணையால், ஆசிரியர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. ஆர். முருகானந்தம், டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள் திரு. கே. ஆர். முருகானந்தம்.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப்பள்ளி ஆசிரியர் நியமனங்களில், மேல்நிலைப் பள்ளித் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்களும், ஆசிரியர் பயிற்சித் தேர்வில் 50% மதிப்பெண்களும் பெற்றவர்கள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் என்று கல்வித்துறையில், அரசாணை எண் 1367, நாள் 3-10-1990 ஆம் ஆண்டில் ஒரு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இந்த மதிப்பெண்களைக் குறைந்தும் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலை கிடைக்காமல் பல ஆயிரக்கணக்கான பேர்கள் இன்றையதினம் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதுபற்றி மாண்புமிகு கல்வி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையிலே வைக்கப் பட்டு உள்ளது.